16.03.2026 OS.No.41/2016 DW7 Name :.சிவராஜ்

குறுக்கு விசாரணை

நான் பள்ளிபட்டில் குடியிருக்கிறேன். அங்கிருந்து சுமார் 2 கி.மீ தொலைவில் மேல்குப்பம் உள்ளது. திருமால் என்னுடைய மருமகன். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் என் மருமகன் சொத்து வாங்கினார். அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. நீலம்மாளிடமிருந்து சொத்தை வாங்கினார். நீலம்மாளின் சொத்து விவரங்கள் எனக்கு தெரியாது. நீலம்மாள் சத்தியமூர்த்தியிடம் நிலம் வாங்கியது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. திருமால் சொத்து வாங்கும்போது வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை. நீலம்மாள் யார்யாருக்கு எதிராக வழக்கு போட்டுள்ளார் என்பது எனக்கு தெரியாது. நீலம்மாள் பொதுஅதிகார பத்திரத்தை ரத்து செய்த விவரம் எனக்கு தெரியாது. வேலையிருந்தால் மட்டும் நான் மேல்குப்பம் கிராமத்திற்கு செல்வேன். என் மருமகனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 16/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.16 16:43:10 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.